Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி - விளம்பரம்
சேகரிக்க முழு நேர - பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 065 | வியாழக்கிழமை Thursday | 04.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் நியமனம்





சென்னை: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் நியமனம் செய்து தமிழக அரசு அரசு அரசாணைவெளியிட்டுள்ளது.

மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், அரசின் நலத்திட்டங்கள் பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடைவதை கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று உள்ளிட்ட அவசரகால சூழ்நிலைகளில் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ளவும் தமிழக அரசு அனைத்து வருவாய் மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்களை நியமித்து அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்ட அரசாணையின்படி மாவட்ட அளவில் நடைபெறும் அரசுத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை கண்காணித்து விரைவுபடுத்துவதற்காக அமைச்சர்களுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த்-விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா - சென்னை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி. வெங்கடரமணன் - மயிலாடுதுறை மாவட்டம் செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா. குமார் - திருவள்ளூர் மாவட்டம்

நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் நெ. மரிய வில்சன் -திருநெல்வேலி மாவட்டம்

பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் - பெரம்பலூர் மாவட்டம்

வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் க. தென்னரசு - காஞ்சிபுரம் மாவட்டம்

வனத்துறை அமைச்சர் ஆர்.வி. ரஞ்சித்குமார் - திருப்பத்தூர் மாவட்டம்

மனிதவள மேலாண்மைத்துறைஅமைச்சர்த. சரத்குமார் - செங்கல்பட்டு மாவட்டம்

சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு -கள்ளக்குறிச்சி மாவட்டம் கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜ் - ராணிப்பேட்டை மாவட்டம்

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைஅமைச்சர் ராஜ்குமார் - தருமபுரி மற்றும் அரியலூர் மாவட்டம்

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம். ஷாஜகான் - நாகப்பட்டினம் மாவட்டம்வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் - தஞ்சாவூர் மாவட்டம்

இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் - திருச்சி மாவட்டம்

பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி. விஜயலஷ்மி - கரூர் மாவட்டம்

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன் - நாமக்கல் மாவட்டம்

மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்டாக்டர்கே.ஜி. அருண்ராஜ் - திருப்பூர் மாவட்டம்

கால்நடைத்துறை அமைச்சர் செ. கமலி - நீலகிரி மாவட்டம்

கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி - வேலூர்

வருவாய்மற்றும்பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் - ஈரோடு மாவட்டம்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வே. சம்பத்குமார் - கோவை மாவட்டம்

எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் ஆர். நிர்மல்குமார் - மதுரை மற்றும் தேனி மாவட்டங்கள்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் முகமது பர்வேஸ் - புதுக்கோட்டை மாவட்டம்

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு - சிவகங்கை மாவட்டம்

தொழில்துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா - கிருஷ்ணகிரி மாவட்டம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கு. ஜெகதீஸ்வரி - விருதுநகர் மாவட்டம்

உயர்கல்வித்துறை அமைச்சர் பெ. விஸ்வநாதன் - திருவாரூர் மாவட்டம்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் - தூத்துக்குடி மாவட்டம்

குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ. மதன் ராஜா - ராமநாதபுரம் மாவட்டம்

போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆ. விஜய் தமிழன் பார்த்திபன் - சேலம் மாவட்டம்

சுற்றுலாத்துறை அமைச்சர் செ. ராஜேஷ்குமார் - கன்னியாகுமரி மாவட்டம்

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் ராஜீவ் - தென்காசி மாவட்டம்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் விக்னேஷ் - திண்டுக்கல் மாவட்டம்


பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகளுடன் இணைந்து வளர்ச்சித் திட்டங்களை துரிதப்படுத்துதல், நலத்திட்ட உதவிகள் மக்களை சென்றடைவதை உறுதி செய்தல், பேரிடர் காலங்களில் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்" என அரசு அறிவுறுத்தியுள்ளது.

### முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழா

## “மீண்டும் வெற்றிச் சரிதத்தை எழுதுவோம்..”

## தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பேச்சு

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னைமெரினாகடற்கரையில்அவரதுநினைவிடம் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளது. அங்கு சென்ற திமுக தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



அவருடன் திமுக முதன்மைச் செயலாளர் கே என் நேரு, திமுக துணை பொதுச் செயலாளர்கள் பொன்முடி, ஆ ராசா எம்பி, கனிமொழி எம்பி,எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு கருணாநிதியின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். கருணாநிதியின் நினைவிடத்தில் "புத்தெழுச்சி நாள் அகவை 103" என்ற வாசகம் மலர்களால் எழுதப்பட்டுள்ளது.

தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனைவளாகத்திற்கு எதிரே உள்ள கருணாநிதியின் திருவுருவ சிலைக்கும் மு.க ஸ்டாலின்மாலைஅணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி அலுவலகத்தில் உள்ள கருணாநிதியின்சிலைக்கும் அவர் மரியாதை செலுத்தினார்.

முன்னாள் முதல்-அமைச்சர்கருணாநிதியின் 103-வது பிறந்தநாள் விழா (புதன்கிழமை) கொண்டாடப்பட்டு வருகிறது. தி.மு.க. சார்பில் சென்னைமெரினாகடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

பின்னர் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில்,75 அடி உயரகொடிக் கம்பத்தில் திமுக கொடியை ஏற்றி வைத்து, அங்குள்ள கருணாநிதியின் திருவுருவச்சிலைக்கு முன்னாள் முதலமைச்சர்மு.கஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு கூடியிருந்த தொண்டர்களுக்கு அவர் இனிப்பு வழங்கினார்.

இந்நிலையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:-

தலைவரின் பிறந்தநாள்! தமிழினத் தலைவரின்பிறந்தநாள்!! மூப்படைந்து சக்கர நாற்காலியில் உட்கார்ந்த பின்பும் ஓய்வின்றி,தனது இறுதி மூச்சுவரை, தமிழினத்திற்காக - தமிழ்நாட்டு மக்களின் உயர்வுக்காக உழைத்திட்ட உன்னதத் தலைவர்!

என்னை என்றும் இயக்கும் தலைவர் கலைஞர் அவர்களே...

வெற்றியைத் தலையிலும், தோல்வியை நெஞ்சிலும் ஏற்றாமல், சோதனைக் கடல்களைச் சோர்வின்றி நீந்திக் கடந்த உங்களது ஆற்றல் என்னிடமும் இருக்கிறது.

நீங்கள் நிறைந்தபோது, உங்களின் ஆற்றலை வேண்டினேன். அந்த ஆற்றலோடு தொடர் வெற்றிகளைப் பெற்று, தமிழ்நாட்டை வரலாறு போற்றும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றோம். இப்போது, வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். எனினும் உங்களது ஆற்றல், என்னோடு மட்டுமல்ல, நீங்கள் உணர்வூட்டி வளர்த்தெடுத்த ஒவ்வொரு உடன்பிறப்பிடமும் இருக்கிறது.

உறுதியாய்ச் சொல்கிறோம்... மீண்டும் வெற்றிச் சரிதத்தை எழுதுவோம்! உதயசூரியனின் ஒளியால் தமிழ்நாட்டைச் சூழ்ந்து வரும் இருளை விரட்டியடி ப்போம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பொதுத்துறை வங்கிகளின் சேவைக்கு புதிய முகம் – காரைக்குடி எஸ்பிஐ கிளை மேலாளர் மற்றும் அலுவலர்களின் சிறப்பான பணிக்கு பாராட்டு!

காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்: இன்றைய காலகட்டத்தில் புதிய வங்கிக் கணக்கைத் தொடங்க விரும்பும் பெரும்பாலானோர் தனியார் வங்கிகளை நோக்கிச் செல்கின்றனர். இணைய சேவைகள், வாடிக்கையாளர் அணுகுமுறை, உடனடி தீர்வுகள் உள்ளிட்ட காரணங்களால் பலரும் தனியார் வங்கிகளையே பரிந்துரைக்கின்றனர். நானும் புதிய சேமிப்புக் கணக்கு தொடங்குவது குறித்து நண்பர்களிடம் ஆலோசனை செய்தபோது, பெரும்பாலானவர்கள் தனியார் வங்கிகளில் கணக்குத் தொடங்குமாறு அறிவுறுத்தினர்.




அதன்படி சில தனியார் வங்கிகளை நேரில் சென்று விசாரித்தபோது, குறிப்பிட்ட வகை சேமிப்புக் கணக்குகளைத் தொடங்க குறைந்தபட்சமாக ரூ.1.50 லட்சம் வரை இருப்புத் தொகை பராமரிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். இதனால் பொதுத்துறை வங்கிகளின் சேவையை அறிந்து கொள்ளும் நோக்கில் இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறைவங்கியானஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (எஸ்பிஐ) வங்கியின் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கல்லூரி சாலை கிளையை அணுகினேன்.

அங்கு வங்கி அதிகாரிகள், ஜீரோ பேலன்ஸ் சேமிப்புக் கணக்கை எளிதாகத் தொடங்கலாம் என்றும், குறைந்தபட்ச இருப்புத் தொகை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் தெளிவாக விளக்கமளித்தனர். இதையடுத்து அந்தக் கிளையில் எனது கணக்கைத் தொடங்கினேன்.

பின்னர் இணைய சேவைகள் தொடர்பாக சில தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டபோது, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். உடனடியாக அவர்கள் மேலதிக அதிகாரிகளிடம் ஆலோசித்து, குறுகிய நேரத்திலேயே பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து சிறந்த சேவையை வழங்கினர்.

குறிப்பாக, வங்கியில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், தினமும் வருகை தரும் வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கு செல்வி அனிகா அவர்கள் மிகுந்த பொறுமையுடன் பதிலளித்து, தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கி வந்தது பாராட்டத்தக்கதாக இருந்தது. அதேபோல் கிளை மேலாளர் திரு. ராகுல் அவர்கள் அனைத்து வாடிக்கையாளர்களிடமும் கனிவான அணுகுமுறையுடன் செயல்பட்டு, அவர்களது தேவைகளை உடனுக்குடன் கவனித்து தீர்வு வழங்கிய விதம் பொதுத்துறை வங்கிகளின் சேவை தரத்தை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

பொதுத்துறை வங்கிகள் குறித்து நிலவி வரும் பல்வேறு கருத்துக்களுக்கு மத்தியில், காரைக்குடி எஸ்பிஐ கல்லூரி சாலை கிளை வழங்கி வரும் சேவை வாடிக்கையாளர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் மேலாளர் மற்றும் அலுவலர்களை நேரில் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தேன்.

பொதுத்துறை வங்கிகளின் சேவை மேலும் சிறந்து வளரவும், வாடிக்கையாளர் நட்பு அணுகுமுறை தொடர்ந்து வலுப்பெறவும் வாழ்த்துகள் தெரிவிக்கிறேன்.

வங்கியின் மொபைல் எண் : 9894601507



தென்காசி மாவட்டத்தின் 7வது ஆட்சியராக ரஞ்ஜித் சிங் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு முறைப்படி முந்தைய ஆட்சியர் கமல் கிஷோர் பொறுப்புக்களை ஒப்படைத்த நிலையில், தொடர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் மாறி, மாறி பூங்கொத்து கொடுத்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்ட நிலையில் இந்த நிகழ்வில் தென்காசி மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமான துறை அதிகாரிகள் உடனிருந்தது குறிப்பிடத்தக்கது.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி, தோவாளை வட்டாரத்தில் உள்ள செண்பகராமன் புதூர் பகுதியில் உள்ள மளிகை கடைகள், தேநீர் கடைகள், இறைச்சி கடைகள் மற்றும் உணவகங்கள் உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட கடைகள் நேற்று மாவட்ட நியமன அலுவலர் தலைமையிலான உணவு பாதுகாப்பு அலுவலர் குழுவின் மூலம் திடீர் ஆய்வு செய்யப் பட்டன. ஆய்வில், உற்பத்தி தேதி மற்றும் காலாவதி குறிப்பிடப்படாத மற்றும் காலாவதியான சுமார் 10 கிலோ எடை கொண்ட உணவுப் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட 1 கிலோ பாலிதீன் பைகளும் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டது. மேலும் சுகாதார குறைபாடுகளுடன் இயங்கிவந்த 5 கடைகளுக்கு தலா ரூபாய் 1000 வீதம் 5000 ரூபாய் மற்றும் தடை செய்யப்பட்ட பாலிதீன் பைகளை பயன்படுத்திய இரண்டு கடைகளுக்கு தலா 5000 ரூபாய் அபராதமும் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

# ஆதரவற்ற நிலையில் இருந்த மூதாட்டிக்கு பாதுகாப்பான வாழ்வை ஏற்படுத்திய குமரி எஸ்பியின் நிமிர் குழுவினர்



கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வழிகாட்டுதலின் பேரில் செயல்பட்டு வரும் நிமிர் குழுவினர், சமூக அக்கறை மற்றும் மனிதநேய பணிகளில் தொடர்ந்து சிறப்பான சேவைகளை செய்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, மங்கலகுன்று, கண்ணன்விளை பகுதியைச் சேர்ந்த 75 வயது மூதாட்டி ஜெர்கோத்தம்மாள் ஆதரவற்ற நிலையில் வாழ்ந்து வந்தது நிமிர் குழுவினரின் கவனத்திற்கு வந்தது.

மூதாட்டியின் நிலையை நேரில் ஆய்வு செய்த நிமிர் குழுவினர், அவருக்கு பாதுகாப்பான மற்றும் நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தும் நோக்கில் உடனடி நடவடிக்கை மேற்கொண்டனர்.

அதன் அடிப்படையில், ஜெர்கோத்தம்மாளை "அடைக்கலம்" முதியோர் இல்லத்தில் பாதுகாப்பாக சேர்த்து, அவருக்கு தேவையான பராமரிப்பு மற்றும் ஆதரவு கிடைப்பதை உறுதி செய்தனர்.

சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் ஆதரவற்றோர், முதியவர்கள் மற்றும் உதவி தேவைப்படுவோரின் நலனிலும் அக்கறை செலுத்தி வரும் நிமிர் போலிசாரின் அணுகுமுறைக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள நிராமணி ஊராட்சியில் கருணாநிதியின் பிறந்தநாள் விழா

## உற்சாகமாக கொண்டாடிய ஒன்றிய செயலாளர்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள நிராமணி ஊராட்சியில், தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 103 -வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும், நல்லூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி தலைமையில் கட்சியினர் அப்பகுதியில் உள்ள அறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர் ஆகியோரின் திருவுருவச்சலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பட்டாசுகள் வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாக கொண்டாடினர்.

அப்போது நல்லூர் ஒன்றிய பொருளாளர் வெங்கடாசலம், இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன், துணை அமைப்பாளர் நகர் பாபு மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைக் கழக செயலாளர்கள் என ஏராளமான கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞருடைய 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி தெற்கு மாவட்ட கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் கணேசன் தலைமையில் பாரதிநகர் பகுதியில் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

நிகழ்வின்போது தூத்துக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் சரவணகுமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ், மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி பால்துரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட திரளானோர் உடனிருந்தனர்.

## முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு

# கீழப்பாவூர் ஒன்றியம் பாவூர்சத்திரம் திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் அவர்கள் தலைமை தாங்கினார் தொழிலதிபர் சேவியர் ராஜன் தொழிலதிபர் ஆர்கே காளிதாஸ் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அருணோதயம் இளங்கோ முன்னாள் துணை சேர்மன் சுதன் கேபி கால சாமி ஆகியோர் முன்னிலை வைத்தனர்



மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் அவர்கள் வரவேற்று பேசினார்கள்

நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்களும் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாலை அணிவித்து சிறப்பித்தார்கள் நிகழ்ச்சியின் போது அரசு பள்ளியில் முதல் மூன்று இடங்கள் எடுத்த மாணவிகள் மாணவர்கள் ஒன்பது நபர்களுக்கு பாராட்டி பரிசு வழங்கப்பட்டது 103 கிலோ லட்டு வழங்கப்பட்டது 103 ஏழை தாய்மார்களுக்கு சேலையும் வழங்கப்பட்டது 103 நபர்களுக்கு 5 கிலோ அரிசி வழங்கினோம் 103 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு யூனிஃபார்ம் முதலியன வழங்கி நிகழ்ச்சியை சிறப்பித்தோம்

நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் மாவட்ட பொறுப்புகுழு முன்னாள் உறுப்பினர் மேகநாதன் மாவட்ட விவசாய அணி துணை தலைவர் செல்வம் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் மாவட்ட பிரதிநிதி வளர்மதி ராஜன் அன்பழகன் கடையம் அட்மா சேர்மன் குணசீலன் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் மாவட்ட பிரதிநிதி துரை ப்பாண்டியன் கவிஞர் செல்வவேல் மாயவநாதன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன் அசோக் கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் மகாராஜன் விடியல் ஆர்த்தி ராஜபாண்டியன் சிவன் பாண்டியன் அருள்ராஜ் வைத்திலிங்க ராஜா ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி பெரியார் திலீபன் முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் அருள்ஜோல் எஸ் ஒயிட் ராஜா ஆனந்த் வினோத் குரு சிங் ஆல்வின் ராஜா சின்ன முருகன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சிவராஜ் பாண்டியன், தனக்குமார் காந்தி ராமன் மாலினி செல்வராஜ் தொழிலதிபர் சந்திரசேகர் தங்கபாண்டியன் பாண்டிஆசா ரி சிவசக்தி டேவிட்சன் ஊராட்சி உறுப்பினர் பொட்டுத்தாய் வெள்ளகால் ஊராட்சி மன்ற தலைவர் செல்வ சுந்தரி ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ் பவுல்ராஜ் துரை பாண்டியன் பொன்னுத்துறை ராஜேந்திரன் மதி வெள்ளைச்சாமி மாரி, தாசன், அருள் பாண்டியன் பூதத்தான் விடியல் ஆர்த்தி மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியா ஜெய் சிங் மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் எட்வின் ஜெயராஜ் நாகல்குளம் காசி பாண்டியன் மணி சின்ன முருகன் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

கிளைக்கழகச் செயலாளர் பா.நடராஜன் நன்றி கூறினார்

# யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு



கன்னியாகுமரி மாவட்டம் -களியல் அருகே உள்ள வட்டப்பாறை அரசு பள்ளி வளாகம் அருகே முகாமிட்டிருந்த யானையை மிகவும் நெருக்கமாக சென்று விரட்ட முயன்றபோது, யானை தாக்கியதில் ராஜேஷ் என்பவர் உயிரிழந்தார். அரசுப் பள்ளி அருகே நீண்ட நேரமாக முகாமிட்டிருந்த யானையை விரட்ட முயன்றபோதே இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது. இப்பகுதிகளில் தொடர்ந்து முகாமிட்டு வரும் யானைகளை அடர் வனப்பகுதிக்குள் விரட்ட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# கோவை மாவட்ட பகுதிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக, தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு, வழங்கபட்ட பட்டாவிற்கான, இடத்தை அளவீடு செய்து தர வேண்டும்

## கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது



கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இதன் மாநில துணைத்தலைவராக வழக்கறிஞர் புஷ்பானந்தம் செயல்பட்டு வருகிறார். இவரது தலைமையில் கோவை மாவட்ட ஆட்சியரிடம், கோரிக்கை மனு ஒன்று அளிக்கப்பட்டது. அந்த மனுவில் கூறியிருப்பதாவது..

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக, தமிழக முற்போக்கு மக்கள் கட்சி செயல்பட்டு வருகிறது. இக்கட்சியின் மூலமாக, பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வரும், வழக்கறிஞர் புஸ்பாணந்தம் தலைமையில் இந்த மனுவை ஆட்சியரின் பார்வைக்கு கொண்டு வருவதாகவும், இதன் ஒரு பகுதியாக கடந்த இரு, வருடங்களுக்கு முன்பு, கோவை மாவட்ட ஆட்சியரிடம் தாழ்த்தப்பட்ட சமூக மக்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்க வேண்டும் என கேட்டு விண்ணப்பம் வழங்கினோம். இந்த விண்ணப்பத்தின் பேரில், மனுக்கள் வழங்கிய பலருக்கும், பல்வேறு பகுதிகளில் தமிழக, ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் இடத்திற்கான பட்டா வழங்கப்பட்டது. சுமார் 50 சதவீதத்திற்கும் மேலான நபர்களுக்கு இன்னமும் பட்டா வழங்கப்படவில்லை, அவ்வாறு வழங்கப்படாமல் உள்ள நபர்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டாக்களை வழங்கிட வேண்டும் எனவும், பட்டாக்கள் வழங்கிய ஏழை எளிய மக்களுக்கு வழங்க பட்ட இடத்திற்கான அளவுகளை உடனடியாக அளவீடு செய்து தர வேண்டும் எனறு, அதிகாரிகள் கவனத்திற்கு இன்று மீண்டும் மனுக்களாக வழங்கி உள்ளார் மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் திவ்யா, லட்சுமி, பாயம்மா தௌலத், தினகரன், பால்ராஜ், செல்வராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் உதவி மேலாளர் A.P.P. ராஜா அழகணனுக்கு பணி நிறைவு பாராட்டு விழா

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தில் 32 ஆண்டுகளாக சிறப்பாக பணியாற்றி உதவி மேலாளராக பணி ஓய்வு பெற்ற A.P.P. ராஜா அழகணனுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்தி பேசினர். விழாவில் இந்து சொந்தக்காரரரான ராஜா அழகணன் தமிழ்நாடு சட்டமன்றத்தின் துணை சபாநாயகர், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு



நிறைவு பெற்ற A.P.P. ராஜா அழகணன் பணி நிறைவு பாராட்டு விழா தேனியில் உள்ள வெஸ்டர்ன் கார்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

விழாவில் தமிழ்நாடு பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு தென் மண்டல செயலாளர் வக்கீல் எம். கே. எம் முத்துராமலிங்கம், முன்னாள் எம்.பி.,பார்த்திபன், தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை முன்னாள் தலைவர் ராஜமோகன், தொழிலதிபர் ராஜசேகரன், வக்கீல் செல்வகுமார் உள்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு எழுச்சி முன்னணி மாவட்ட அமைப்பாளர் கோவிந்தராஜ், மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி, இ.காங்கிரஸ் ஐ.என். டி.யு.சி மாவட்ட தலைவர் ஜம்பு சுதாகர்,வெளிச்சம் அறக்கட்டளை நிறுவனர் நாணயம் சிதம்பரம், கூட்டுறவு வீட்டு வசதி சங்க செயலாளர் செல்வகுமார் உள்பட பல்வேறு கட்சி பிரமுகர்கள், தொழிலதிபர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு பணி நிறைவு பெற்ற A.P.P. ராஜா அழகணனுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகளை வழங்கினர்.

இந்த பணி நிறைவு பாராட்டு விழாவிற்கு பிரதிநிதி, தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு நிதி அமைச்சர் தமிழ்நாடு துணை முதல்வர் ஆகியோருக்கு நேர்முக உதவியாளராக இந்த பணி காலத்தில் நேர்மை அர்ப்பணிப்பு மற்றும்நிர்வாகதிறமையுடன் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்த க்கது.

விழா நிகழ்வினை தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு மாநில பொதுச்செயலாளர் வி.ஆர். ராஜன் தொகுத்து வழங்கினார். விழாவிற்கான ஏற்பாடுகளை A.P.P. ராஜா அழகணன் குடும்பத்தினர் செய்திருந்தனர்.



முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞரின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சரும் கீதாஜீவன் தலைமையில் கலைஞர் அரங்கம் முன்பு அமைக்கப்பட்டுள்ள திருஉருவப்படத்திற்கு தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத்தலைவர் இசக்கிமுத்து மற்றும் முத்தரையர் கனவா மீன்பிடி நலசங்க பொருளாளர் எஸ்.ஆர்.சந்தனராஜ் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரி லிங்கம்,செயலாளர் முருகையா, ஆலோசகர் எஸ்.ஆர்.சந்தனராஜ் மகாராஜா, அகமது மாற்று முத்தரையர் கனவா மீன்பிடி நல சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு

# தேனி பழைய பேருந்து நிலையத்தில் திமுகவினர் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி கொண்டாட்டம்



முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக முழுவதும் திமுக சார்பில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக தேனி பழைய பேருந்து நிலையத்தில் தேனி வடக்கு மாவட்ட திமுக சார்பில்மறைந்தகலைஞர் கருணாநிதியின் புகைப்படத்திற்கு மலர்களை தூவி திமுக நிர்வாகிகள் "கலைஞர் புகழ் வாழ்க வாழ்க" என கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து சாலையில் சென்ற வாகன ஓட்டிகளுக்கும், பொதும க்களுக்கு கலைஞர் கருணாநிதியின்பிறந்தநாளை முன்னிட்டு இனிப்புகளை வழங்கினார் இதில் தேனி வ டக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் என சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கோவைக்கு மாவட்ட பஞ்சாயத்துக்கு தேசிய விருது அறிவிப்பு



கோவை: கோவை மாவட்ட பஞ்சாயத்துக்கு தேசிய விருது கிடைத்துள்ளது. மத்திய அரசு 2025ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற தேசிய பஞ்சாயத்து விருதுகளை தற்போது அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த உயரிய விருது பட்டியலில்கோவைமாவட்டம் 3-வது பரிசை பெற்று ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் பெருமையை சேர்த்துள்ளது.

மேலும் இந்த தேசிய விருதுகளுக்கானபோட்டியில் திரிபுராவின் சிபாஹிஜாலாவு மாவட்டத்திற்கு முதல்பரிசு மற்றும் ஒடிசா கஞ்சம் மாவட்டத்திற்கு 2வது பரிசு கிடைத்துள்ளது. மேலும் சிறந்த ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி போன்ற பல்வேறு பிரிவுகளுக்கான விருதுகளும் சேர்த்து அறிவிக்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி நிர்வாகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, தேசிய அளவில் முத்திரை பதித்துள்ள கோவை மாவட்டத்திற்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் குவிந்து வருகிறது.






தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி 103வதுபிறந்த நாளை முன்னிட்டு (03/06/2026) நேற்று ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி சூரம்பட்டி பகுதி 47வது வார்டு சூரம்பட்டி வலசு, நஞ்சப்பகவுண்டன் வலசு அருகில் உள்ள திமுக அலுவலகத்தில் ஈரோடு மாநகராட்சி 47 ஆவது மாமன்ற உறுப்பினர் S.நந்தகோபு தலைமையில் 47 ஆவது வார்டு திமுக செயலாளர் நெப்போலியன் முன்னிலையில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.இந்த நிகழ்வில் 47 ஆவது வார்டு திமுக நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். மேலும் இந்த நிகழ்வில் 47வது வட்டத்திற்கு உட்பட்ட BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# அப்பாவு தான் எம்.எல்.ஏ.; 2016ல் ராதாபுரம் தொகுதியில் அதிமுகவின் இன்பதுரை வெற்றி செல்லாது என ஐகோர்ட் தீர்ப்பு

சென்னை: 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் அதிமுக வேட்பாளர் ஐ.எஸ்.இன்பதுரை வெற்றி பெற்றது செல்லாது என்றும், திமுக வேட்பாளர் மு.அப்பாவு வெற்றி பெற்றுள்ளார் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அதிரடி தீர்ப்பளித்துள்ளது.

2016 தேர்தலில் அதிமுக வேட்பாளர் இன்பதுரை-திமுகவேட்பாளர் அப்பாவு இடையே நேரடி போட்டிஇருந்தது.வாக்கு எண்ணிக்கையின் இறுதியில் 45 வாக்குகள் வித்தியாசத்தில் அதிமுக வேட்பாளர் இன்பதுரை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.அதிமுகவின் இன்பதுரை வெற்றியை எதிர்த்து திமுக வேட்பாளர் அப்பாவு 2016-ல் தொடர்ந்த தேர்தல் வழக்கில் நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் இன்று தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் நீதிபதி அளித்த தீர்ப்பில், '104 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் அப்பாவு வெற்றி பெற்றது மறு வாக்கு எண்ணிக்கையில் நிரூபணம் ஆகியுள்ளது. இந்த தீர்ப்பால் இன்பதுரை தகுதி நீக்கம் செய்யப்பட்டார் என ஆகாது. ஆனால் இந்த 5 ஆண்டுகளுக்கான எம்எல்ஏ பென்ஷனை அவரால் கேட்க முடியாது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2016 - 2021-ஆம் ஆண்டுகளில் அரசு ஆவணங்களில் ராதாபுரம் எம்எல்ஏ என்ற இடங்களில் இன்பதுரை பெயரை நீக்கவும், அதற்கு பதிலாக அப்பாவு பெயரை மாற்றவும் தமிழக அரசுக்கு நீதிபதி ஜெயச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.



இந்தத் தீர்ப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அப்பாவு, "2016 ராதாபுரம் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்ததாக அறிவிக்கப்பட்டது. அப்போது நான் தபால் வாக்குகளை எண்ணாமல் முடிவுகளை அறிவித்து விட்டார்கள். அது செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தேன். உச்சநீதிமன்றதீர்ப்பின் அடிப்படையில் உயர் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் 2019 அக்டோபர் 4-ஆம் தேதி தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. இந்த வாக்குகள் எண்ணிக்கையின் அடிப்படையில் 104 வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றதாக தற்போது நீதிபதி அறிவித்துள்ளார்.

2016-2021 வரை ராதாபுரம் தொகுதி எம்எல்ஏ என இன்பதுரை பெயரை நீக்கிவிட்டு என் பெயரை சேர்க்கவும் உத்தரவிட்டுள்ளனர். இந்தத் தீர்ப்பு மகிழ்ச்சியளிக்கிறது, நீதி வென்றது" எனத் தெரிவித்தார்.

# மம்தாவுக்கு நெருக்கடி: எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு உரிமை கோரினார் ரிதப்ரதா



கொல்கத்தா: மேற்கு வங்க சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு 58 எம்எல்ஏக்களின் ஆதரவுடன் கூடிய கடிதத்தை சபாநாயகர் ரதிந்திரபோஸிடம்ரிதப்ரதா பானர்ஜி வழங்கினார். இதன்மூலம், மம்தா பானர்ஜிக்கு நெருக்கடி முற்றியு ள்ளது. நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி மொத்தமுள்ள 294 தொகுதிகளில்,80தொகுதிகளில் மட்டுமேவெற்றி பெற்றது. மம்தா பானர்ஜியும்தான் போட்டியிட்ட தொகுதியில் தோல்வியை தழுவினார். 207 இடங்களில் வெற்றி பெற்ற பாஜக, சுவேந்து அதிகாரி தலைமையில் ஆட்சியை அமைத்தது.

தேர்தல் தோல்விக்குப் பிறகுதிரிணமூல் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட உட்கட்சிப் பூசல் காரணமாக, எம்எல்ஏக்களில் ஒரு பிரிவினர் மம்தா பானர்ஜிக்கு எதிராக காய்களை நகர்த்தி வருகின்றனர்.

திரிணமூல் காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர் ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் இவர்கள் இயங்கி வருகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு, திரிணமூல் காங்கிரசின் மூத்ததலைவர்களில் ஒருவரான சொவன்தேப் சட்டோபாத்யாயை மம்தா பானர்ஜி அறிவித்த நிலையில், எதிர் தரப்பினர் ரிதப்ரதா பானர்ஜியை முன்னிறுத்தி உள்ளனர். மொத்தமுள்ள 80 திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏக்களில் 58 பேர், ரிதப்ரதா பானர்ஜிக்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்தை சபாநாயகர் ரதிந்திர போஸிடம் அவர்கள் இன்று (ஜூன் 3) வழங்கினர். மேலும், சாந்தீபன் சஹா, ஜாவெத் அகமது கான், சியோலி சஹா, சபினா யாஸ்மின் ஆகியோர் துணை எதிர்க்கட்சித் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு,கொறடாபதவியும் தங்கள் அணிக்கே உரியது என்றும் அவர்கள் உரிமை கோரியுள்ளனர்.

அதே நேரத்தில்,மம்தா பானர்ஜிதான் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்றும் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.கடிதத்தைப் பெற்றுக்கொண்ட சபாநாயகர் ரதிந்திர போஸ், பரிசீலித்து முடிவெடுப்பதாக அறிவித்துள்ளார்.

ஒரு கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்எல்ஏக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் தனி அணியாக செயல்பட முடிவெடுத்தால் அவர்கள் மீது கட்சித் தாவல்தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது. தற்போது மம்தா பானர்ஜிக்கு எதிராக மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிக எம்எல்ஏக்கள் தனி அணியாக செயல்பட முடிவெடுத்திருப்பதால்சட்டப்படி அவர்களின் பதவியை பறிக்க முடியாது. மகாராஷ்டிராவில் சிவ சேனாவில் இருந்து ஏக்நாத் ஷிண்டே பிரிந்தபோதும், தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இருந்து அஜித் பவார் பிரிந்தபோதும் இதேபோன்ற நிகழ்வுகள் அரங்கேறின. தற்போது மேற்கு வங்கத்திலும் இது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கட்சி கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சியில் மம்தா பானர்ஜி களமிறங்கி உள்ளார். கட்சியின் அனைத்துக் குழுக்களும், கட்சியின் துணை அமைப்புகளின் அனைத்துக்குழுக்களும் உடனடியாக கலைக்கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார். திரிணமூல் காங்கிரஸ் எக்ஸ் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், "தீவிர பரிசீலனைக்குப் பிறகு, மேற்குவங்கதிரிணாமுல் காங்கிரஸின் அனைத்துக் குழுக்களும்,துணை அமைப்புகளின் அனைத்து குழுக்களும் கலைக்கப்படுகின்றன. உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்திற்குட்பட்ட

# தொப்பூர் கேண்டீன் பேருந்து நிறுத்தத்தில் போதுமான மின் விளக்குகள் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்திற்குட்பட்ட தொப்பூர் கேண்டீன் பேருந்து நிறுத்தத்தில் போதுமான மின் விளக்குகள் மற்றும்எச்சரிக்கை ஒளிரும் விளக்குகள் அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓமலூரில் இருந்து தர்மபுரிசெல்லும்தேசிய நெடுஞ்சாலையில் தீவட்டிப்பட்டியை அடுத்து அமைந்துள்ள முக்கியமான பேருந்து நிறுத்தமாக தொப்பூர் கேண்டீன் பேருந்து நிறுத்தம் விளங்கி வருகிறது. இப்பகுதியில் பாலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால் மின் கம்பங்கள் அகற்றப்பட்டு, இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரவு நேரங்களில் செல்லும் வாகன ஓட்டிகள் அடிக்கடி விபத்துகளில் சிக்கி வருவதாக கூறப்படுகிறது. மேலும், பேருந்து நிறுத்தம் அருகே அமைக்கப்பட்டுள்ள மையத் தடுப்புகள் போதுமான விளக்குகள் இல்லாததால்தெளிவாகதெரியாமல், அவற்றின் மீது வாகனங்கள் மோதி உயிரிழப்பு உள்ளிட்ட விபத்துகள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

இது தொடர்பாக நெடுஞ்சாலைத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டதாகவும், இதுவரை உரியநடவடிக்கைஎடுக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.



எனவே, பொதுக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பில், தொப்பூர் கேண்டீன் பேருந்து நிறுத்தத்தில் உடனடியாக போதுமான மின் விளக்குகள் மற்றும் எச்சரிக்கை ஒளிரும் விளக்குகள் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தாரமங்கலம் எம்ஜிஆர் காலனி K.சசிகுமார் மற்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி சண்முகபுரம் பகுதி திமுக சார்பில் டாக்டர். கலைஞர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பகுதி செயலாளர் சுரேஷ்குமார் 103 பேருக்கு பிரியாணி வழங்கினார். திமுக தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் 103வது பிறந்தநாளையொட்டி சண்முகபுரம் திமுக சார்பில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மேயர் ஜெகன் பெரியசாமி வழிகாட்டுதலின்படி பாலகிருஷ்ணா தியேட்டர் அருகில் சண்முகபுரம் பகுதி திமுக செயலாளரும் மாநகராட்சி சுகாதாரகுழு தலைவருமான சுரேஷ்குமார் தலைமையில் கலைஞர் படத்திற்கு மலர் தூவி பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி 103 பேருக்கு பிரியாணி பார்சல் வழங்கினார். விழாவில் வட்டப்பிரதிநிதிகள் பொன்ராஜ் செல்வக்குமார் அவைத்தலைவர் கணேசபாண்டியன், சிறுபான்மை பிரிவு மைதீன் வர்த்தக அணி இஸ்மாயில் மற்றும் சதாம் செந்தில்குமார் மணிகண்டன் தர்மா உள்பட பலர் கலந்து கொண்டனர்



ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி 103 வது பிறந்தநாள் விழா மாவட்ட கழகத்தின் சார்பாக மாவட்ட கழக செயலாளர் முகாம் அலுவலகம், மாவட்ட கழக அலுவலகம், முனிசிபல் காலனி, ப.செ. பார்க் , மொடக்குறிச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது . இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சரும் சு. முத்துசாமி அவர்கள், மற்றும் திமுக கழக துணை பொதுச்செயலாளர், கழக மாநில , மாவட்ட, மாநகர கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் ,கழக சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கைத்தறி துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் விஜய் பாலாஜியை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் ஈரோடு மாவட்ட தலைவரும் குருபீட தலைவருமான நடராஜன் தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து மேல்மருவத்தூர் அம்மா அருள் பிரசாதத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். அருகில் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் குருபீட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி 103 வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாநகர் கோட்டை பகுதி திமுக சார்பில் திருநகர் காலனி ,கோட்டை பகுதி திமுக அலுவலகம் முன்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் படத்திற்கு கோட்டை பகுதி திமுக கழக செயலாளர் பொ. இராமச்சந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் இரா ஜெயந்தி, பகுதி கழக நிர்வாகிகள் அண்ணாதுரை, பாபு ,மீனாட்சி, குமரேசன், வேலுமணி, பாலசுந்தரம், வட்டக் கழக செயலாளர்கள் பாலன், பூபாலன், பிரகாஷ் ,மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர் பாத்திமா, சாகுல் லட்சுமி, கதிரவன் ,ஜன்னத்து நிஷா, தங்கவேல், சுல்தான், ஆறுமுகம், அரவிந்த், புவனேஸ்வரன் ,ஜாகிர் உசேன், பாலசுப்பிரமணியம், மீரான், அழகர்சாமி ,தங்கவேல் ,செல்வம், புத்தர் ,சரண்யா ,தொகுதி ஆறுமுகம் ,மூர்த்தி, தியானேஸ்வரன், சசிக்குமார், குமார் ,செபாஸ்டின், செல்வம், மணிகண்டன், அமல்ராஜ், ரவிச்சந்திரன், பாபு உட்பட வட்டக் திமுக பகுதி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# டெல்லி உணவகத்தில் பயங்கர தீ விபத்து: பலி 21 ஆக அதிகரிப்பு



புதுடெல்லி: தெற்கு டெல்லி மாள்வியா நகரில் உள்ள ஓர் உணவகத்தில் இன்று காலை ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் சிக்கி 21 பேர் பலியாகினர். பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பலர் வெளிநாட்டவர் என்று தெரியவந்துள்ளது. 9 மணியளவில் தெற்கு டெல்லி தீயணைப்புத் துறைக்கு, மாள்வியா நகரில் உள்ள பிரபலமான 'லெமன் க்ரீன்' என்ற உணவகத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு தீயணைப்பு வாகனங்கள் விரைந்தன. நிலைமையின் தீவிரத்தை அறிந்து 10க்கும் மேற்பட்ட வாகனங்கள் அங்கு வரவழைக்கப்பட்டன.

தீ விபத்தில் இதுவரை 21 பேர் உயிரிழந்ததாக தகவல். பலர் படுகாயமடைந்துள்ளதாகவும், அவர்களில் பலர் வெளிநாட்டவர் என்றும் தெரியவந்துள்ளது. உயிரிழப்பு எண்ணிக்கையை டெல்லி போலீஸ் உறுதி செய்துள்ளது.

டெல்லி தீயணைப்புத் துறை அளித்த ஊடகப் பேட்டியில், "டெல்லி மாள்வியா நகர் லெமன் க்ரீன் உணவகத்தில் தீ விபத்து ஏற்பட்டது குறித்த தகவல் வந்ததும், தீயணைப்பு வாகனங்கள் உள்பட பல நவீன இயந்திரங்களை நாங்கள் அனுப்பிவைத்தோம்.

உணவகத்தின் அடித்தளத்தில் சிக்கியிருந்த 3 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்று முதற்கட்ட தகவல்களைப் பகிர்ந்துள்ளது. தீ விபத்துக்கான காரணம் இன்னும் உறுதியாகவில்லை. மின்சார கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம்" என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் டெல்லி முதல்வர் ரேகா குப்தா, டெல்லி தீ விபத்து மிகுந்த வேதனையை தருவதாகவும், விபத்து தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டதோடு, நிலைமைய கூர்ந்து கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இந்த கடினமான காலத்தில் உயிரிழந்தோர், காயமடைந்தோரின் குடும்பங்களுடன் நிற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, இந்தச் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்தவும்,பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணங்களை உடனடியாக ஏற்படுத்தித் தரவும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், தீ விபத்தின்போது கட்டிடத்தின் மேல் தளத்தில் 2 பெண்கள் குதித்த காட்சிகள் அடங்கிய வீடியோ இணையத்தில் வெளியாக காண்போரை பதற வைக்கிறது.

பிரதமர் மோடி இரங்கல்: டெல்லி மாள்வியா நகர் தீ விபத்து துயரமானது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல். காயமடைந்தோர் விரைவில் குணமடைந்து திரும்ப பிரார்த்தனைகள். பாதிக்கப்பட்டோருக்கு உரிய உதவிகளைச் செய்வதில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்." என்று எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும் என்றும் காயமடைந்தோருக்கு ரூ.50 ஆயிரம் வழங்கபப்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க நடவடிக்கை: டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் உறுதி

சென்னை: தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்றார் மகேஷ் குமார் அகர்வால்.பின்னர்,அவர், போதைப்பொருட்கள் கட்டுப்பாடு,பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு



எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க இருக்கின்றோம்" என தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப் பெருங்கட்சியாக உருவெடுத்த நிலையில், தற்போது கூட்டணி ஆட்சிதான் நடந்து வருகிறது. புதிய ஆட்சி அமையும் முன்னர் தேர்தலை ஒட்டி தேர்தல் ஆணையம் தமிழக டிஜிபி, தலைமைச் செயலர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் இருந்த அதிகாரிகளை மாற்றம் செய்தது.

இந்நிலையில்,தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு டிஜிபியாக மகேஷ் குமார் அகர்வால் நியமிக்கப்பட்டார். அவர் இன்று தமிழக டிஜிபியாக பொறுப்பேற்றார். அவருக்கு பூங்கொத்துகொடுத்து,காவல்துறைஅதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

முன்னதாக,சட்டம்ஒழுங்குடிஜிபியாகதேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர், சிறைத் துறை டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக சட்டம் - ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் மகேஷ்குமார் அகர்வால் கூறும்போது, "தமிழக மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி. முதல்வர் விஜய் மற்றும் தமிழக மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் போதைப் பொருட்கள் கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கஇருக்கின்றோம்.தமிழககாவல்துறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

# Indian national killed in Iran drone strike on Kuwait airport

Iran carried out a drone strike on a passenger terminal 1 at Kuwait International Airport, wounding several people and forcing air traffic to be suspended, Kuwaiti officials said on Wednesday. Ministry of defence spokesman Brigadier General Saud Abdulaziz Al-Otaibi described the attack as "criminal Iranian aggression which resulted in significant material damage to the building and injuries." Earlier, the US carried out fresh "self-defense" strikes on Qeshm Island in response to attempted attacks by Iran across the Middle East on June 2, the US Central Command (CENTCOM) said. According to the CENTCOM, all ballistic missiles launched by Iran failed to hit their intended targets. "Two Iranian missiles fired at Kuwait fell short or broke apart enroute, and three missiles launched at Bahrain were immediately intercepted by US and Bahrain air defense forces," CENTCOM wrote in a post on X (formelly Twitter).

"Embassy of India in Kuwait expresses its deepest condolences at the tragic demise of an Indian national due to an attack on the airport in Kuwait today", the Embassy wrote.

Embassy of India in Kuwait expresses its deepest condolences at the tragic demise of an Indian national due to an attack on the airport in Kuwait today. The Embassy is in touch with the bereaved family and is closely coordinating with the Kuwaiti authorities to render all...

US President Donald Trump said he "would like to meet" Iran's supreme leader Mojtaba Khamenei, in an interview published Wednesday.

"I would like to meet him, and we probably will meet at some point, depending on how it all works out," Trump told the New York Post's "Pod Force One". The Israeli army said it intercepted a "hostile aircraft" that crossed into Israeli territory from Lebanon on Wednesday, the first such infiltration reported by the military in more than 24 hours.



"Following the sirens that sounded a short while ago regarding a hostile aircraft infiltration in the areas of Manara and Kiryat Shmona, a suspicious aerial target that crossed from Lebanon into Israeli territory was intercepted," the military said.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.